<u>தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்</u>

**செய்தி வெளியீட்டு எண். 73/2025** நாள்.12.06.2025

**<u>செய்திக்குறிப்பு</u>**

**ஒருங்கிணைந்த தொழில்நுட்ப பணிகள் தேர்வு (பட்டயம்/தொழிற்பயிற்சி நிலை), 2025.**

தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகத்தில் உள்ள தொழில்நுட்ப உதவியாளர் (மின்னியல்) உள்ளிட்ட 58 பதவிகளுக்கான 1910 காலிப்பணியிடங்களை நிரப்ப, ஒருங்கிணைந்த தொழில்நுட்ப பணிகள் தேர்வு (பட்டயம்/தொழிற்பயிற்சி நிலை)-க்கான அறிவிக்கை, தேர்வாணையத்தின் ஆண்டுத்திட்டத்தில் குறிப்பிட்டுள்ளபடி இன்று (13.06.2025) வெளியிடப்பட்டுள்ளது. தேர்வர்கள் 13.06.2025 முதல் 12.07.2025 வரை இணையவழியில் விண்ணப்பங்களை சமர்ப்பிக்கலாம். தேர்வர்கள் தேர்வுக்கட்டணத்தை UPI மூலமாகவும் செலுத்தலாம். OMR/கணினி வழித் தேர்வு முறையில் 31.08.2025, 07.09.2025 மற்றும் 11.09.2025 முதல் 15.09.2025 வரை நடைபெறும்.

**தொடர்ச்சியாக 12-வது முறையாக தேர்வாணையத்தின் ஆண்டுத்திட்டத்தில் குறிப்பிட்ட தேதியில் தேர்விற்கான அறிவிக்கை தேர்வாணையத்தால் தவறாமல் வெளியிடப்பட்டுள்ளது.**

ஒருங்கிணைந்த தொழில்நுட்ப பணிகள் தேர்வு (பட்டயம்/தொழிற்பயிற்சி நிலை) 2024-ம் ஆண்டு அறிவிக்கையில், இரண்டு நிதியாண்டுகளுக்கான 2022 காலிப்பணியிடங்கள் நிரப்பப்பட உள்ளன. அதாவது, ஒரு நிதியாண்டிற்கு சராசரியாக 1011 காலிப்பணியிடங்கள் நிரப்பப்பட உள்ளன. 2024 – ஆம் ஆண்டிற்கான அறிவிக்கையோடு ஒப்பிடும் போது, 2025-ம் ஆண்டு ஒருங்கிணைந்த தொழில்நுட்ப பணிகள் தேர்வு (பட்டயம்/தொழிற்பயிற்சி நிலை) மூலம், ஒரு நிதியாண்டிற்கு (2025-2026) 1910 காலிப்பணியிடங்கள் நிரப்பப்படவுள்ளன. மேலும், 2025-ம் ஆண்டு அறிவிக்கையில் வெளியிடப்பட்ட காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை, அரசுத் துறை / நிறுவனங்களிடமிருந்து அதிகரித்து பெறப்படும் பட்சத்தில், கலந்தாய்விற்கு முன்பாக மேலும் அதிகரிக்கப்படும், எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**ச. கோபால சுந்தர ராஜ், இ.ஆ.ப.,**

**செயலாளர்**